தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### டி.ஜி.ஹள்ளி ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பெங்களூருவுக்கு குடிநீர் வழங்கும் திப்பகொண்டன ஹள்ளி (டி.ஜி.ஹள்ளி) ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பெங்களூருவுக்கு குடிநீர் ஆதரமாகத் திகழும் திப்பகொண்டன ஹள்ளி ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், ஏரியின் நீர்மட்டம் 25 அடியாக உயர்ந்தது. பெங்களூரு ஊரகம், ராமநகரம் மாவட்டங்களைச் சேர்ந்த ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளான தேவனஹள்ளி, தொட்டபளாபூர், மாகடி, நெலமங்களாவில் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருவதால் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. வழக்கமாக செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் நிரம்பும் ஏரி, இந்தமுறை ஆகஸ்ட் மாதத்திலேயே 25 அடி வரை நிரம்பியுள்ளது. கடந்தாண்டு இதே காலத்தில் ஏரியின் நீர்மட்டம் 15.9 அடியாக இருந்தது. ஏரியின் மொத்த கொள்ளளவு 74 அடியாகும். 1992-ஆம் ஆண்டில்தான் ஏரி முழுமையாக நிரம்பியது. 1998-99-இல் முக்கால்பகுதி நிரம்பியிருந்தது. அந்தாண்டு ஏரியின் நீர்மட்டம் 71 அடியாக இருந்தது. கடந்த 7 ஆண்டுகளாக அணையின் நீர்மட்டம் குறைவாக இருந்ததால், பெங்களூருவுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் பிரச்னை இருந்தது. நிகழாண்டு பலத்த மழை பெய்துள்ளதால், ஏரி முழுமையாக நிரம்பும் நம்பிக்கையில் இருக்கிறார் பெங்களூரு குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் வாரிய தலைமைப் பொறியாளர் எஸ்.கிருஷ்ணப்பா. இதுகுறித்து அவர் மேலும் கூறியது: ஏரி முழுமையாக நிரம்பினால், பெங்களூருவுக்கு தினமும் 135 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படும். 1980-ஆம் ஆண்டு வரை பெங்களூரு மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான ஆதரமாகத் திகழ்கிறது. ஏரியில் போதுமான நீர் இல்லாத காரணத்தால்தான் காவிரி நீர் கொண்டு வரும் திட்டம் வகுக்கப்பட்டது என்றார் அவர்.

## பெல்காமில் 2015-இல் வேளாண் தொலைநோக்கு உச்சி மாநாடு

கர்நாடக மாநிலம், பெல்காமில் 2015, பிப்.21-ஆம் தேதி வேளாண் தொலைநோக்கு உச்சி மாநாடு நடை பெறுகிறது. இந்திய விவசாயிகளிடம் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதற்காக ஆண்டுதோறும் நாக்பூரில் நடைபெற்று வந்த வேளாண் தொலைநோக்கு உச்சிமாநாடு, முதல் முறையாக தென்னிந்தியாவில் நடைபெறுகிறது. 2015-ஆம் ஆண்டு, பிப்.21 முதல் 23-ஆம் தேதி வரை பெல்காமில் வேளாண் தொலைநோக்கு உச்சிமாநாடு நடைபெறுகிறது. கர்நாடக சிறுதொழில் சங்கத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் இந்த மாநாட்டில் வேளாண் தொழில்நுட்பங்கள், உணவுப் பதனிடுதல் நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது. வேளாண், அதுசார் தொழில்களில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள், நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகள், தொழில்முனைவோர், சிறுதொழிலர்களிடம் கொண்டு செல்வதே இந்த மாநாட்டின் நோக்கம் என்று மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த மாநாட்டில் தொழில் நிறுவனங்கள், அரசு நிறுவனங்களின் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள், விவசாயிகள், சிறு தொழிலர்கள், நுகர்வோர் உள்ளிட்டோர் அதிகளவில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. மகசூல் பெருக்கல், மண் சோதனை, உணவுப் பதனிடுதலில் ஏற்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தும் கண்காட்சியும் இடம் பெறுகிறது. கண்காட்சி தவிர, சிறு தொழில் நிறுவனங்களுக்கான கருத்தரங்கம், பயிலரங்கமும் நடைபெறுகிறது.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## மாதுளை உற்பத்தி சூடுபிடிக்கும்

புதுடில்லி: நாடு தழுவிய அளவில் பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதால், வரும் நவம்பர் மாதம் முதல், மாதுளை உற்பத்தி சிறப்பான அளவில் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.மகாராஷ்டிரா:இதையடுத்து, உள்நாட்டில் மாதுளை

உற்பத்தி, வழக்கமான, 8 லட்சம் டன்னிலிருந்து, 12 – 13 லட்சம் டன் என்ற அளவில் அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.நாட்டின் ஒட்டுமொத்த மாதுளை உற்பத்தியில், மகாராஷ்டிரா, 90 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் வழக்கமாக, 85 ஆயிரம் ஹெக்டேரில் மாதுளை பயிரிடப்படும். ஆனால், தற்போது, இதைவிட, கூடுதலாக, 50 ஆயிரம் ஹெக்டேரில் மாதுளை பயிரிடப்பட்டுள்ளது.இதே போன்று, கூடுதலாக, குஜராத் மாநிலத்தில், 15 ஆயிரம் ஹெக்டேரிலும், மத்திய பிரதேசத்தில், 10 ஆயிரம் ஹெக்டேரிலும் மாதுளை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.தேவை குறைவு:மாதுளைக்கு நல்ல விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் பலர், திராட்சை பயிரிடுவதை தவிர்த்து, மாதுளை சாகுபடியில் கவனம் செலுத்த துவங்கிஉள்ளனர். இதன் காரணமாக, மாதுளை சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதையடுத்து, வரும் நவம்பர் முதல் இதன் வரத்து சிறப்பான அளவில் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. கடந் தாண்டில், ஒரு கிலோ மாதுளை, 100 – 150 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, சில்லரை விற்பனையில், இதன் விலை, 50 – 60 ரூபாய் என்ற அளவில் உள்ளது.இந்திய மாதுளை, துபாய், இங்கிலாந்து, சவுதி அரேபியா, நெதர்லாந்து, எகிப்து உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.தற்போது, தேவை குறைவு மற்றும் தரம், அளவு உள்ளிட்ட பிரச்னைகள் காரணமாக, இந்நாடுகளுக்கான மாதுளை ஏற்றுமதி பாதிப்புக்குள்ளாகியுள்ளது. 40 ஆயிரம் டன்: மேலும், பணப் பட்டுவாடா பிரச்னைகளால், ரஷ்யாவிற்கான மாதுளை ஏற்றுமதி யிலும், வர்த்தகர்கள் அதிக ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.சென்ற நிதியாண்டில், நாட்டின் மாதுளை ஏற்றுமதி, 40 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்தது. பொதுவாக, நவம்பர் முதற்கொண்டு மாதுளை ஏற்றுமதி சூடுபிடிக்கும் என, இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

## <u>வேளாண் திட்ட மானியம் கிடைப்பது எங்கே?</u>

திருவள்ளூர் : தமிழக அரசு மானியத்தில் வழங்கும் வேளாண் கருவிகள், இடுபொருட்கள் மற்றும், மானியம் குறித்த விவரங்கள் அடங்கிய கையேட்டினை ஆட்சியர் வெளியிட்டார்.திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்,

விவசாயிகளுக்கு, தமிழக அரசால் வழங்கப்படும் திட்டங்கள், அவற்றை பெறத்தக்க வழிமுறைகள், கிடைக்கும் இடங்கள், அதற்கான தொடர்பு தொலைபேசி எண்கள் அடங்கிய தகவல் கையேடு, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வெளியிடப் பட்டது.ஆட்சியர் வீர ராகவ ராவ் கையேட்டினை வெளியிட, மாவட்ட வருவாய் அலுவலர் முத்து பெற்றுக் கொண்டார். மேலும், இந்த கையேடு, விவசாயிகளுக்கு வழங்க, அனைத்து உதவி வேளாண் அலுவலகங்களில் கிடைக்கும். இக் கூட்டத்தில், வேளாண் இணை இயக்குனர் சுந்தரராஜன், கோட்டாட்சியர்கள் மாரிமுத்து, வீரப்பன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நான்கு லட்சம் மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும், நான்கு லட்சம் கறவை மாடுகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடப்பட உள்ளது என, கால்நடைத் துறை தெரிவித்துள்ளது.தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாகவே பரவலாக மழை பெய்து வருகிறது. எனவே, காலநிலை மாற்றத்தால், கால்நடைகளுக்கு கோமாரி போன்ற பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.இந்த நிலையில், கறவை மாடுகளுக்கு ஆண்டு தோறும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில், கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றன.நடப்பாண்டில், ஏழாம் கட்டமாக செப்டம்பர் 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை, கோமாரி நோய் தடுப்பூசி முகாம், மாவட்டம் முழுவதும் உள்ள நான்கு மண்டலங்களில் நடைபெறவுள்ளது. இந்த முகாமில், 4,42,320 கறவை மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக,கால்நடைத் துறை தெரிவித்துள்ளது.

## சோதனை அடிப்படையில் கால்நடை தீவன சாகுபடி

தர்மபுரி: கால்நடைகள் மேய்ச்சலுக்கு அரசு சார்பாக, சோதனை அடிப்படையில், தீவன பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.தர்மபுரி மாவட்டத்தில், ஆண்டுக்கு ஆண்டு பருவமழை பொய்த்து வருவதால் பெரும்பாலான விவசாயிகள் மாற்று தொழிலுக்கு மாறி வருகின்றனர். இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்ட ரியல் எஸ்டேட் அதிபர்கள் விவசாயிகளிடம் இருந்து நிலங்களை வாங்கி

வீட்டுமனைகளாக மாற்றி விற்பனை செய்து வருகின்றனர்.ரியல் எஸ்டேட் மூலம் கிடைக்கும், அதிக வருவாய்க்கு ஆசைப்பட்டு விவசாயிகள் தங்களது விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றி விற்பனை செய்து வருகின்றனர். இதனால், விவசாயம் பாதிக்கப்பட்டு வருவதுடன், அதை சார்ந்த கால்நடை வளர்ப்பும் பாதிக்கப்பட்டு வருகிறது.இதனால், விவசாயிகள் வளர்த்து வரும் ஆடு, மாடுகளுக்கும், அரசு வழங்கி வரும் விலையில்லா ஆடு, மாடுகளுக்கும் போதிய தீவனம் கிடைக்காமல், அவதி அடைந்து வரும் நிலை உள்ளது. கால்நடைகளுக்கு, போதிய தீவனம் விலையில்லாமல் கிடைக்க தமிழக அரசு கால்நடைத்துறைக்கு சொந்தமான இடங்களில் தீவன பயிர்களை சோதனை அடிப்டையில் சாகுபடி செய்து, மேய்ச்சல் நிலங்களாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது.தர்மபுரி மாவட்டம், அரக்காசனஹள்ளியில் கால்நடைத்துறைக்கு சொந்தமாக உள்ள, 55 ஏக்கர் நிலத்தில், இத்திட்டத்தை செயல்படுத்து தமிழகஅரசு, 10 லட்ச ரூபாய் ஒதுக்கி உள்ளது.இதில், ஏழு லட்ச ரூபாய் மதிப்பில் நிலம் சீரமைக்கப்பட்டு, தீவன பயிரான முயல்மசால் என்ற தீவனம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தீவன சாகுபடி அளவு கணக்கெடுப்புக்கு பின், அரக்காசனஹள்ளி பகுதியில் உள்ள கால்நடை களை இப்பகுதியில் மேய்சலுக்கு அனுமதிக்க கால்நடைத்துறையினர் முடிவு செய்துள்ளனர்.இதுகுறித்து, கால்நடைத்துறை அலுவலர் ஒருவர் கூறிய தாவது:கால்நடைகளுக்கு ஏற்பட்டு வரும் தீவன பற்றக்குறையை போக்க, தமிழக அரசு, குறைந்த விலையில் வைக்கோல்களை வழங்கி வருகிறது. மேலும், கால்நடைகளுக்கு தீவனம் வழங்க பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, கடந்த, ஓராண்டுக்கு முன் தர்மபுரி மாவட்டம், அரக்காசனஹள்ளியில் கால்நடைத்துறைக்கு சொந்தமான இடம் சீரமைக்கப்பட்டு, முயல் மசால் எனப்படும் தீவனப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இந்தாண்டு அரக்காசனஹள்ளியில் தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால், எதிர்பார்த்த அளவுக்கு தீவன வளர்ச்சி இல்லை. 10 ஆண்டுகளுக்கு மேல் ஆனாலும் கூட முளைக்கும் வகையில் பக்குவப்படுத்தப்பட்ட விதைகள் விதைக்கப்பட்டு உள்ளதால், தீவன பயிரின் வளர்ச்சியை கணக்கிட, வட கிழக்கு பருவமழையை எதிர்நோக்கி உள்ளோம்.வடகிழக்கு பருவமழைக்கு, பின் தீவன

பயிர் வளர்ச்சி குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும். அரசின் உத்தரவுக்கு பின் இத்திட்டத்துக்கு, மாவட்டம் முழுவதும், மேலும் விரிவுபடுத்துவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

## மழையால் நீர் தேக்கங்களில் வெள்ளப்பெருக்கு

குன்னூர் : குன்னூர் ஜிம்கானா நீர்தேக்கத்தில் 6 மாதங்களுக்கு பிறகு தண்ணீர் அதிகரித்துள்ளது.குன்னூரில் கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால், குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. முக்கிய நீர் ஆதாரமான ரேலியா அணை 3 முறை முழுமையாக வறண்டு ஜிரோ பாயின்ட்டை தொட்டது. இதேபோல, ஜிம்கானா, பந்துமி, கரன்சி போன்ற பகுதிகளில் உள்ள நீர்தேக்கங்களில் உள்ள நீர் நிலைகளும் வறண்டன.இதனால், குன்னூரில் 30 வார்டுகளுக்கும் தண்ணீர் வழங்க சிக்கல் ஏற்பட்டதால், பொதுமக்கள் பணம் செலவழித்து குடிநீரை வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.இந்நிலையில், நேற்று முன்தினம் கன மழை பெய்ததால், நீர் நிலைகளில் நீர்வரத்து உயர்ந்துள்ளது.குறிப்பாக ஹைபீல்டு, பாரஸ்ட்டேல் மலைப்பகுதிகளில் அதிகளவில் கொட்டுகிறது. இதனால், 20 அடி உயரம் உள்ள ஜிம்கானா நீர்தேக்க தொட்டி முழுமையாக நிரம்பி தண்ணீர் வெளியேறி செல்கிறது.ஆறு மாதத்துக்கு பிறகு இதில் தண்ணீர் நிரம்பியும், போதிய சேமிப்பு வசதி ஏற்படுத்தாததால் தண்ணீர் வீணாகி ஆற்றில் சென்று கலக்கிறது. மக்கள் கூறுகையில்,"குன்னூரில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், நீர்தேக்கங்களில் அதிகளவில் தண்ணீரை சேமிக்கும் வசதிகளை ஏற்படுத்த வேண்டும்' என்றனர்.**கூடலூர்:** கூடலூர் பகுதியில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்தது. இதனால், இப்பகுதியில் கடும் குளிர்ச்சியான கால நிலை நிலவி வருகிறது. மேலும், ஓவேலி பகுதிகளில் உள்ள ஆறுகளிலும், அதன் இடையே உருவாகியுள்ள நீர் வீழ்ச்சிகளிலும்,தண்ணீர் அதிகரித்து காணப்படுகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## உருளைக்கிழங்கு விவசாயம் அபாரம்

குன்னூர் : குன்னூரில் உருளை கிழங்கு விவசாயம் களைகட்டியுள்ளது.நீலகிரி மாவட்டம், குன்னூரில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வறட்சின் காரணமாக

விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டன. எனினும், கடந்த மாதத்தில் இருந்து மழை அவ்வப்போது ஓரிரு நாட்கள் பெய்தாலும் எந்த பயனும் இல்லாமல் இருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பெய்த கன மழையால் நிலம் ஓரளவு ஈரமடைந்துள்ளது. இதனால், குன்னூர் சிங்காரதோப்பு உட்பட பல்வேறு பகுதிகளிலும், உருளைக்கிழங்கு, காரட் உட்பட மலை காய்கறிகள் பயிரிடும் பணிகள் துவங்கியுள்ளன. இதுகுறித்து விவசாயி மனோகரன் கூறுகையில், "தற்போதைய மழை விவசாயத்திற்கு ஏதுவாக உள்ளது. விதைக்கும் பணிகள் துவங்கியுள்ளோம். பருவ மழை தொடர்ந்தால் மிகவும் பயனுள்ளதாக அமையும்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி**

வேலூர், : வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மையத்தில் வெண்பன்றி வளர்ப்பு பற்றி கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் சரஸ்வதி பயிற்சி அளித்தார். வெண்பன்றி வளர்ப் பின் நன்மைகள், பன்றி இனங்கள், இனப்பெருக்கம், தீவன மேலாண்மை, நோய்கள் தடுப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

**மக்காச்சோளம் விதைப்பில் விவசாயிகள் தீவிரம்**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள், கடந்த காலங்களில் கரும்பு, நெல், கம்பு, மஞ்சள், கருணைக்கிழங்கு, மணிலா உள்ளிட்ட பயிர்களை அதிக அளவு பயிரிட்டு வருகின்றனர். கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக மக்காச்சோளம் பயிரிடுவதில் உளுந்தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களை

சேர்ந்த விவசாயிகள் அதிக அளவு ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் ஓரளவிற்கு மழை பெய்துள்ளதால் ஏரி உள்ளிட்ட நீர் நிலைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மானாவாரியாக ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள கம்பு, மணிலா உள்ளிட்ட விளை பொருட்கள், தற்போது விட்டுவிட்டு பெய்து வரும் மழையினால் செழித்து வளர்ந்துள்ளது விவசாயிகளை மகிழ்ச்சி அடைய செய்துள்ளது. இந்நிலையில் தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி வண்டிப்பாளையம், ஆரியநத்தம், நைனாக்குப்பம், மதியனூர், கூ.கள்ளக்குறிச்சி, சேந்தநாடு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிடுவதற்கான ஆயத்த பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஒரு வாரமாக உழுது வந்த நிலையில், கடந்த இரண்டு நாட்களாக மக்காச்சோளம் விதை போடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து விவசாயிகள் முத்துலிங்கம், அய்யனார், ஏழுமலை உள்ளிட்டோர் கூறும்போது: கடந்த 3 ஆண்டுகளாக மானாவாரி பயிராக மக்காச்சோளம் பயிரிட்டு வருகிறோம். இதற்கான விதையை தனியார் கடைகளில் ஒரு கிலோ ரூ.250 வரையில் வாங்கி வருகிறோம். ஒரு ஏக்கருக்கு 7 கிலோ வீதம் ரூ.1750 வரையில் செலவாகிறது. ஆனால் அறுவடை செய்யும் போது குறைந்த அளவிற்கே விலை போகும் நிலை உள்ளது.

## <u>கொப்பரைக்கு கிராக்கி கிலோ ரூ.135க்கு விற்பனை</u>

கோவை, : கோவை மாவட்டத்தில் மழை பற்றாக்குறை காரணமாக தென்னை மரங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக தேங்காய் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. இதனால் 30 சதவீத தேங்காய் வரத்து குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதி மற்றும் எண்ணெய் தயாரிப்பிற்கு தேவையான கொப்பரை உற்பத்திக்கு தேங்காய் கொள்முதல் செய்வதற்காக வர்த்தகர்கள் போட்டி போடுவதால், தேங்காய் விலை கிலோ ரூ.24க்கு உயர்ந்துள்ளது. தேங்காய் விலை அதிகரிப்பால் களங்களில் கொப்பரையாக உற்பத்தி செய்வதும் குறைந்துள்ளது. இதனால் கொப்பரைக்கு

கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ கொப்பரை ரூ.135க்கு விற்கப்படுகிறது. கொப்பரை விலை கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை ரூ.100 வரை விற்றது. தற்போது திடீரென்று விலை அதிகரித்ததால், தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் அதிர்ச்சியடைந்துள்ளன. காங்கயம், வெள்ளகோவில் உள்ளிட்ட பகுதியிலுள்ள எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் தங்களது உற்பத்தியை குறைத்துள்ளன.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாய நிலங்களில் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை**

தர்மபுரி, வன விலங்குகளால் விவசாய நிலங்களில் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி சங்கர் தெரிவித்தார்.

குறைதீர்க்கும் கூட்டம்

தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அதிகாரி சங்கர் தலைமை தாங்கினார். கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் மோகன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சுசிலா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முத்தரசு மற்றும் அரசு அலுவலர்கள், துறை அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் பேசினர். விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து மாவட்ட வருவாய் அதிகாரி பேசியதாவது:- தர்மபுரி மாவட்டத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தலில் ஏற்படும் குறைபாடுகளை களைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பவர் கிரிட் திட்டத்திற்காக வாங்கப்பட்ட நிலங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்ட பணியாளர்களை பொதுப்பணித்துறை பணிகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏரிகள் ஆக்கிரமிப்புகள்

வன விலங்குகளால் விவசாய நிலங்களில் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீட்டு தொகை வழங்கவும், விவசாய பயன்பாட்டிற்காக ஏரியில் வண்டல் மண் எடுப்பது குறித்து விரைவில் அனுமதி வழங்கவும், சர்க்கரை ஆலை மூலம் விவசாயிகளுக்கு உரிய பங்குத்தொகை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேளாண்மை விற்பனைத்துறை மூலம் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும். களையெடுக்கும் கருவிக்கு மானியம் வழங்க ஆணை பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் மானியம் வழங்கப்படும். நடப்பு பருவத்திற்கு தேவையான துவரை விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டசத்து ஆகியவை மொரப்பூர், கடத்தூர், கம்பைநல்லூர், வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட வருவாய் அதிகாரி சங்கர் தெரிவித்தார்.

கண்காட்சி

முன்னதாக விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தையொட்டி பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகள் குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்டு இருந்த கண்காட்சினை மாவட்ட வருவாய் அதிகாரி சங்கர் மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் பார்வையிட்டனர். கண்காட்சியில் விவசாய பணிகளுக்கு தேவையான எந்திரங்கள், கருவிகள் ஆகியன இடம் பெற்றிருந்தன.

**<u>பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.2 கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை</u>**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. 4 ஆயிரத்து 358 மூட்டைகளில் 2 லட்சத்து 10 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொப்பரை தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் (கிலோ) 104 ரூபாய் 50 காசு முதல் 110 ரூபாய் 70 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் (கிலோ) 71 ரூபாய் 70 காசு முதல் 103 ரூபாய் 25 காசு வரை ஏலம் போனது. மொத்தம் 2 கோடியே 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆனது. கடந்த புதன்கிழமையை விட கிலோவுக்கு 8 ரூபாய் குறைந்து கொப்பரை தேங்காய்

விற்பனை ஆனது. பெருந்துறை வாரச்சந்தையில் தேங்காய் விற்பனை நடைபெற்றது. இதற்கு விவசாயிகள் ஒரு லட்சம் தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர். இதில் முதல் தரம் தேங்காய் ஒன்று 14 ரூபாய் முதல் 16 ரூபாய் வரை விற்பனை ஆனது. 2–ம் தரம் தேங்காய் 11 ரூபாய் முதல் 13 ரூபாய் வரை விற்பனை ஆனது. 3–ம் தரம் தேங்காய் 8 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விற்பனை ஆனது. மொத்தம் ரூ.13 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை ஆனது. கடந்த வாரத்தை விட தேங்காய் ஒன்றுக்கு 1 ரூபாய் கூடியிருந்தது.

## வாடிப்பட்டி பகுதியில் மழை குட்லாடம்பட்டி அருவியில் தண்ணீர் விழுகிறது

வாடிப்பட்டி பகுதியில் பெய்த மழையினால் குட்லாடம்பட்டி அருவியில் தண்ணீர் வரத் தொடங்கியுள்ளது.

### பலத்த மழை

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி யூனியன் குட்லாடம்பட்டி பஞ்சாயத்திற்கு உட்பட்ட தாடகைநாச்சிபுரத்தில் இயற்கை எழில்கொஞ்சும் சிறுமலையின் அடிவாரத்தில் உள்ளது தாடகைநாச்சியம்மன் அருவி. இந்த அருவியில் கடந்த 2012 ஆண்டு நவம்பர் மாதம் 26–ந்தேதி பெய்த பலத்த மழையினால் தண்ணீர் வந்தது. அதன்பின் கடந்த ஆண்டு முழுவதும் தண்ணீர் வரவில்லை. மேலும் இந்த அருவியில் சிறுமலையில் பலத்தமழை பெய்தால் மட்டுமே தண்ணீர் வரும் அதன்பின் வறண்டு காணப்படும். தற்போது நேற்று முன்தினம் இரவு முழுவதும் பெய்த பலத்தமழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அருவியில் தண்ணீர் கொட்டதொடங்கியுள்ளது. இரவு பலத்த ஓசையுடன் அருவியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வெள்ளம் விழுந்தபோது பல புதிய பாறைகள் மேலே இருந்து கீழே உருண்டு விழுந்தன. அதனால் குட்லாடம்பட்டி கண்மாய், கொட்டமடைக்கி கண்மாய், நாகர்குளம்கண்மாய், கருப்பணமணியன்காரர் கண்மாய் உள்பட பல கண்மாய்களுக்கு தண்ணீர் வரதொடங்கி கண்மாய்களும் நிரம்பிவருகின்றன.

### கண்மாய்கள் நிரம்புகின்றன

மேலும் அருவியின் மேல்பகுதியில் உள்ள புலியருவியுலும், குலசேகரன்கோட்டை கோம்பைகரடு பின்புறம் உள்ள மீன்பெட்டிஅருவியிலும் தண்ணீர் கொட்டுகிறது இதனால் இந்த பகுதியில் உள்ள கண்மாய்களும் மாவூர்அணையிலும்

தண்ணீர்நிரம்புகிறது. குட்லாடம்பட்டி அருவிக்கு அடிவாரத்தில் இருந்து மேலே ஏறிசெல்லும் பாதை சீர்குலைந்துகாணப்படுகிறது. இதன் படிக்கட்டுகள் எல்லாம் சிதிலமடைந்து உள்ளன. அருவியின் அருகில் கைபிடிக்கம்பிகள், தளம் ஆகியவை உருக்குலைந்துபோனதால் சுற்றுலாபயணிகள் கவனமாக குளிக்கவேண்டியநிலை உருவாகியுள்ளது. தற்போது தண்ணீர்வரத்து அதிகரித்துள்ளதால் வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் சுற்றுலாபயணிகளின் வருகை அதிகரித்து வருகிறது. மேலும் மதுபாட்டிகள் கொண்டுவருவதற்கும், பிளாஸ்டிக்பைகள் கொண்டுவருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனவே அந்த பகுதியில் புதிய சோதனை சாவடி அமைக்கப்பட்டு பயணிகள் கொண்டு வரும் மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

**<u>பாலமேடு பகுதியில் கனமழை: கண்மாய்கள் நிரம்பி உடைந்தன; குடியிருப்பு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு சேதப்பகுதிகளை சீரமைக்க நடவடிக்கை</u>**

பாலமேடு பகுதியில் பெய்த கனமழை காரணமாக கண்மாய்கள் நிரம்பி உடைந்தன. இதனால் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சேதம் அடைந்த பகுதிகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>48 மில்லி மீட்டர் மழை</u>

தென்மேற்கு பருவமழை ஆண்டுதோறும் ஜூன் மாதம் தொடங்கும். கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்த நிலையில் விவசாய பணிகள் பின்தங்கியது. அதேபோல இந்த ஆண்டும் ஜூன் மாதம் பருவமழை தொடங்கவில்லை. அதேபோல இந்த மாத்தின் தொடக்கத்திலும் வெயிலின் அளவு கடுமையாக இருந்தது. அவ்வப்போது லேசான மழை பெய்து வந்தது. இந்தநிலையில் கடந்த சில நாட்களாக தென்மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதேபோல் நேற்றுமுன்தினம் காலையில் இருந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுடன், சாரல் மழையும் பெய்து வந்தது. பாலமேடு பகுதியில் மஞ்சமலை, வகுத்தமலை, சிறுமலை தொடர்ச்சி, செம்பூத்துகரடு, பெருமலை உள்ளிட்ட மலைப்பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு சுமார் 5 மணி நேரத்திற்கும் மேலாக இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. அதன் முடிவில் 48 மில்லி மீட்டர் மழை பதிவானது.

<u>திடீர் வெள்ளம்</u>

இதனால் பாலமேடு மஞ்சமலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இருபுறம் உள்ள கரைகளில் உடைப்பு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் புகுந்தது. இந்த வெள்ளநீர் முடுவார்பட்டி, ஆதனூர், தேவசேரி, சுக்காம்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள கண்மாய்களை ஒரே நாள் இரவில் நிரப்பியது. அத்துடன் பொந்துகம்பட்டி, சேந்தமங்கலம், வெ.பெரியகுளம் மற்றும் கோடாங்கிபட்டி இலுப்பகுளம் கண்மாய் உள்பட 10–க்கு மேற்பட்ட கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. இந்த திடீர் மழையினால் கோடாங்கிபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கவுண்டங்குளம் கண்மாய், பொந்துகம்பட்டி குளங்கரு கண்மாய்களில் உடைப்பு ஏற்பட்டு மழைநீர் வெளியேறிவிட்டது. அதேபோல் சேந்தமங்கலம் பகுதியில் வந்த காட்டாற்று வெள்ளம் குடியிருப்பு பகுதிகளில் புகுந்தது. நள்ளிரவில் வந்த திடீர் வெள்ளத்தால் வீட்டிலிருந்து கோழி, ஆடு, அரிசி, சமையல் பாத்திரங்கள், பள்ளி சீருடைகள், நோட்டு புத்தகம், உள்ளிட்டவை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. வயல்களில் இருக்கும் சொட்டுநீர் பாசன கருவிகள் சேதமடைந்தன.

<u>கண்மாய் நிரம்பியது</u>

அத்துடன் சாத்தியாறு அணைப்பகுதியிலும் இரவு முழுவதும் பெய்த மழையினால் அணையின் நீர் மட்டம் 7 அடி உயர்ந்தது. இதன்படி 29 அடி நீர்மட்டம் உள்ள அணையில் தற்போது 18 அடிக்கு தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 46 கனஅடி நீர் வரத்து உள்ளது. இந்த தீடீர் மழையினால் சேதம் அடைந்த கோடாங்கிபட்டி, பொந்துகம்பட்டி, சேந்தமங்கலம் மற்றும் பாலமேடு பகுதிகளை சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.வீ.கருப்பையா பார்வை யிட்டார். பின்னர் அந்த பகுதிகளை உடனடியாக சீரமைக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி அவருடன் வந்திருந்த வாடிப்பட்டி தாசில்தார் குமார், துணை தாசில்தார் சுரேஷ், மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களிடம் கூறினார். இந்த மழையினால் கோடாங்கிபட்டி காஞ்சரங்குளம் கண்மாய் 12 வருடங்களுக்கு பிறகு நிரம்பி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

**<u>மதுரையில் பரவலாக மழை</u>**

மதுரையில் நேற்று மதியம் 1 மணியளவில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. அலங்காநல்லூர், மேலூர், திருமங்கலம், திருப்பரங்குன்றம், அவனியாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 40 நிமிடம் மழை தொடர்ந்தது. குறிப்பாக அலங்காநல்லூர், மேலூர் பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதில் அலங்காநல்லூர் அருகே ஒரு கண்மாயில் மழைநீர் தேங்கி கண்மாய் உடைந்தது. மற்ற பகுதிகளில் சேதம் எதுவும் இல்லை. மதுரை மாவட்டத்தில் நேற்றுகாலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு(மில்லி மீட்டரில்)வருமாறு:– ஆண்டிபட்டி (வாடிப்பட்டி)–24, சாத்தியாறு அணை–47, மேட்டுப்பட்டி–24,சிட்டம்பட்டி–0.4,மதுரை–2.

<u>சிவகங்கை</u>

சிவகங்கையில் நேற்று காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட் டது. வெயிலே தெரியாத அளவுக்கு இருந்தது. இந்த நிலையில் மதியம் 2.50 மணி அளவில் திடீரென்று மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை சுமார் 15 நிமிடம் நீடித்தது. காரைக்குடியில் நேற்று பிற்பகல் 3.30 மணி அளவில் திடீரென்று குளிர்ந்த காற்று வீசி பலத்த மழை பெய்தது.இந்த மழை 4 மணி வரை நீடித்தது. இந்த மழையினால் ஆடிப்பட்டத்தில் விதை விதைத்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>நீலகிரி மாவட்டத்தில் ஒரே நாளில் 434 மி.மீட்டர் மழை பதிவு</u>**

நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 434 மி.மீட்டர் மழை பதிவாகிஉள்ளது.

<u>ஒரே நாளில் 434 மி.மீட்டர் மழை பதிவு</u>

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் ஊட்டி, குன்னூர்,கோத்தகிரி, நடுவட்டம், கூடலூர், பந்தலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும் கடுங்குளிர் நிலவுவதால் பொதுமக்கள் வீடுகளில் முடங்கி கிடக்கின்றனர். இதே போல் ஆறுகளில் வெள்ளபெருக்கு ஏற்பட்டு உள்ளது. தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் இயற்கை பேரிடர் ஏற்படும் அபாய நிலை நிலவுகிறது. தேவாலாவில் அதிகபட்சமாக 65 மி.மீட்டரும், கேத்தியில் 61

மி.மீட்டரும், கோடநாடு 47 மி.மீட்டரும், குன்னூரில் 39 மி.மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஒரு நாளில் 434 மி.மீட்டர் மழை பெய்தது.

<u>வெறிச்சோடிய சுற்றுலா தலங்கள்</u>

நீலகிரியில் கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பகல் நேரங்களில் கடும் குளிர் நிலவுகிறது. மேலும், மழை தொடர்ந்து பெய்து வருவதால் சுற்றுலா பயணிகள், பொது மக்கள் பெரிதும் அவதி அடைந்து உள்ளனர். கடும் குளிர் மற்றும் மழை காரணமாக நீலகிரிக்கு குறைந்த அளவிலான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இதனால் ஊட்டி தாவரவியல் பூங்கா, தொட்டபெட்டா, ரோஜா பூங்கா, பைக்காரா படகு இல்லம் உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் சுற்றுலா பயணிகள் இன்றி வெறிச்சோடி காணப்படுகிறது. ஆனாலும் ஒரு சில சுற்றுலா பயணிகள் குடைகளை பிடித்தபடி சுற்றுலா தலங்களை கண்டு களித்தனர்.

<u>தேயிலை தொழிலாளர்கள் அவதி</u>

தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பலத்த மழையின் காரணமாக பச்சை தேயிலையை பறிக்க முடியாமல் கடும் அவதி அடைந்து வருகின்றனர். மேலும் மின் கம்பத்தின் மீது மரங்கள் விழுவதால் ஆங்காங்கே மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனை தொடர்ந்து மின் வாரிய ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மின் இணைப்புகளை சரி செய்தனர்.

<u>மழை அளவு</u>

ஊட்டி, ஆக.24–

நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பதிவான மழை அளவு விவரம் வருமாறு:–

குன்னூர்–39 மி.மீ.

கூடலூர்–31 மி.மீ.

குந்தா–7 மி.மீ.

கேத்தி–61 மி.மீ.

கோத்தகிரி–35.2 மி.மீ.

நடுவட்டம் – 12 மி.மீ.

ஊட்டி– 30 மி.மீ.

கல்லட்டி–5 மி.மீ.

கிளன்மார்கன் – 18 மி.மீ.

அப்பர் பவானி – 25 மி.மீ.

எமரால்டு–10 மி.மீ.

அவலாஞ்சி– 15 மி.மீ.

கெத்தை–10 மி.மீ.

கிண்ணக்கொரை–8 மி.மீ.

கோடநாடு–47 மி.மீ.

தேவாலா– 65 மி.மீ.

பர்லியார்– 16 மி.மீ.

## செட்டிகுளத்தில் ஒரே நாளில் ரூ.2¾ லட்சத்திற்கு வெங்காயம் ஏலம்

பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் திறந்தமுறை ஏலம் நடைபெற்றது. இதில் ஆலத்தூர் நாட்டார்மங்கலம், ஈச்சங்காடு, இரூர், செட்டிகுளம், மாவிலிங்கை, சத்திரமனை, பொம்மனப்பாடி, மருதடி ஆகிய கிராமங்களைச்சேர்ந்த விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை கொண்டு வந்து விற்பனை செய்தனர். செட்டிகுளம் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் கொண்டுவந்திருந்த 478 மூட்டை (24,431கிலோ) சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். ஏலத்தில் பழைய பட்டறை வெங்காயம் அதிக பட்சம் ரூ.18.50 க்கும் புதிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.25.50–ம் சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ.12.00–ம் விலை கிடைத்தது. இதன்மூலம் ரூ.2 லட்சத்து 88 ஆயிரத்து 88–க்கு விற்பனை நடைபெற்றது.

## சிவகங்கை, காரைக்குடியில் திடீர் மழை

சிவகங்கை, காரைக்குடியில் நேற்று திடீர் மழை பெய்தது.

திடீர் மழை

சிவகங்கையில் நேற்று காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட் டது. வெயிலே தெரியாத அள வுக்கு இருந்தது. இந்த நிலையில் மதியம் 2.50 மணி

அளவில் திடீரென்று மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை சுமார் 15 நிமிடம் நீடித்தது. இந்தமழையினால் நகரின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல் கரை புரண்டு ஓடியது. சிவகங்கை சிவன்கோவில், காந்திவீதி பகுதிகளில் மழைநீர் ரோடுகளில் தேங்கி நின்றது. இந்த மழையினால் சிவகங்கை நகரில் உள்ள பல்வேறு கண்மாய் மற்றும்ஊரணிகளில் தண்ணீர் வரத்து ஏற்பட்டுள் ளது.

காரைக்குடி

காரைக்குடியில் நேற்று காலையில் வழக்கம்போல் வெயில் வாட்டி வதைத்தது. அவ்வப்பபோது மேகங்கள் திரண்டு கலைந்து சென்றது. இந்த நிலையில் மதியம் 3.30 மணி அளவில் திடீரென்று குளிர்ந்த காற்று வீசி பலத்த மழை பெய்தது.இந்த மழை 4 மணி வரை நீடித்தது. இந்த மழையினால் ஆடிப்பட்டத் தில் விதை விதைத்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>தூத்துக்குடியில் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன் திறந்து வைத்தார்</u>

தூத்துக்குடி, தூத்துக்குடியில் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடியை நேற்று, அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன் திறந்து வைத்தார்.

<u>பசுமை நுகர்வோர் அங்காடி</u>

தூத்துக்குடி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி எட்டயபுரம் ரோட்டில் அமைக்கப்பட்டு உள்ளது. இதன் திறப்பு விழா நேற்று காலை நடந்தது. விழாவுக்கு மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தலைமை தாங்கினார். தூத்துக்குடி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் எஸ்.வி.எஸ்.பி. மாணிக்கராஜா முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக சுற்றுலாத்துறை அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன் கலந்து கொண்டு புதிய அங்காடியை திறந்து வைத்து, காய்கறி விற்பனையை தொடங்கி வைத்தார்.

<u>விலை விவரம்</u>

நேற்று காலையில் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி திறக்கப்பட்டவுடன் மக்கள் ஆர்வமுடன் காய்கறிகளை வாங்கி சென்றனர். அப்போது தேங்காய் உள்ளிட்ட சில காய்கறிகளுக்கு விலை நிர்ணயிக்கப்படாமல் இருந்தது. இந்த பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடியில் நேற்று விற்பனை செய்யப்பட்ட

காய்கறிகளின் ஒரு கிலோ விலை விவரம் (ரூபாயில்) வருமாறு:–

கத்தரிக்காய்– 12

வெண்டைக்காய்– 14

அவரைக்காய்– 17

சீனிஅவரைக்காய்– 14

புடலங்காய்– 12

பாகற்காய்– 32

முருங்கைக்காய்– 26

தக்காளி– 17

பீர்க்கங்காய்– 18

பச்சை மிளகாய்– 16

உள்ளி– 23

பல்லாரி– 24

உருளைக்கிழங்கு– 30

பீன்ஸ்– 39

பட்டர்பீன்ஸ்– 80

முட்டைகோஸ்– 16

கேரட்– 20

பீட்ரூட்– 22

சவ்சவ்– 28

கருணை கிழங்கு– 80

காளிபிளவர்– 14

முள்ளங்கி– 13

சுரைக்காய்– 8

கறிவேப்பிலை– 17

கீரை– 4

நூக்கல்– 21

<u>கலந்து கொண்டவர்கள்</u>

விழாவில் எம்.பி.க்கள் ஜெ.ஜெயசிங் தியாகராஜ் நட்டர்ஜி, எல்.சசிகலா புஷ்பா, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ரவிக்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கு.கோ.ஜானகிராமன், வேளாண்மை இணை இயக்குனர் தட்சணாமூர்த்தி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராஜகோபால், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் சுதாகர், கூட்டுறவு பண்டகசாலை தலைவர் எட்வின்பாண்டியன், மாவட்ட கூட்டுறவு ரேஷன் கடை பணியாளர் சங்க செயலாளர் பி.டி.ராஜா என்ற தங்கதுரை, குட்டி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## குறைதீர்வு கூட்டத்தில் கலெக்டர் முன்பு அமர்ந்து விவசாயிகள் தர்ணா

திருவண்ணாமலையில் நடந்த விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில், கரும்புக்கு அரசு அறி வித்த விலையை வழங்க வலியுறுத்தி கலெக்டர் முன்பு விவசாயிகள் தர்ணா போராட்டம் நடத்தினர்.

குறைதீர்வு கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறை தீர்வுநாள் கூட்டம் நேற்று திரு வண்ணாமலை கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், கலெக்டர் அ.ஞானசேகரன் தலைமையில் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பழனி மற்றும் அனைத்துத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பேசி னர். அவர்கள் மழை இல்லாத காரணத்தில் விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும், வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று பேசினர்.

கூடுதல் விலை

மேலும் கரும்பு விவசாயிகள் பேசுகையில் அரசு அறிவித்த ரூ.300 கூடுதல் விலையை தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்கவில்லை. இதனால் திருவண்ணா மலை மாவட் டத்தில் சுமார் 50 கோடிக்கு மேல் கரும்பு விவசாயி களுக்கு வழங்க வேண்டிய பணம் நிலுவையில் உள்ளது. ஏற்கனவே அருணாச்சலா சர்க்கரை ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு பலகோடி ரூபாயை நிலுவை வைத்து விட்டு ஆலையை மூடிவிட்டு சென்றுவிட்டனர். அதே போன்று தற்போதும் சர்க்கரை ஆலைகள் விவசா யிகளுக்கு கோடி கணக்கில் நிலுவை வைத்துள்ளனர்.

தர்ணா போராட்டம்

கடலூர் மாவட்டத்தில் அரசு அறிவித்த விலையை வழங்காத தனியார் சர்க்கரை

ஆலைக்கு கலெக்டர் சீல் வைத்துள்ளார். அதே போன்று திருவண்ணாமலை மாவட்டத்திலும் அரசு அறி வித்துள்ள விலையை வழங்க மாவட்ட நிர்வாகம் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இந்த கோரிக்கையை வலி யுறுத்தி விவசாயிகள் பலர் கலெக்டருக்கு முன்பு வந்து தரையில் அமர்ந்து கோஷமிட் டனர். அப்போது நிலுவை தொகைகளை வழங்க முத்த ரப்பு கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட் டது.

## <u>திண்டிவனம் பகுதியில் சாமந்தி பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்</u>

திண்டிவனம் பகுதியில் சாமந்தி பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சாமந்தி பூ சாகுபடி

திண்டிவனம் அருகே எண்டியூர், நடுக்குப்பம், ஒலக்கூர், ஓங்கூர், மரக்காணம், குருவம்மா பேட்டை, மொளசூர் உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் அதிகளவில் சாமந்தி பூக்களை சாகுபடி செய்துள்ளனர். தற் போது அவை நன்கு வளர்ந்து நல்ல விளைச்சலை கொடுத்து வருவதால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், சாமந்தி பூ சாகுபடி செய்வதன் மூலம் ஆண்டுதோறும் நல்ல வரு மானம் பெற்று வருகின்றோம். இதன் காரணமாக அதிகளவில் சாமந்தி பூக்களை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றோம். சாமந்தி பூ செடிகள் பூ பூக்க தொடங்கிய நாள் முதல் 2 நாட்களுக்கு ஒரு முறை எங்களுக்கு வருமானம் கிடைக்கின்றது. மேலும் கடந்த ஆண்டை விட நடப் பாண்டில் சாமந்தி பூக்களின் விலை அதிகரித்துள்ளது. அதன்படி தற்போது ஒரு கிலோ சாமந்தி பூ ரூ.30-ல் இருந்து ரூ.40 வரை விற்கப் படுகின்றது. திருவிழா நாட்களில் ரூ.100 வரை விற்கப்படுகின்றது. இதனால் நாங்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். இதனிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு திண்டி வனம் பகுதியில் பரவலாக பெய்த மழையினால் சாமந்தி பூ செடியானது மேலும் நன்கு வளர்ந்து, அமோக விளைச் சலை கொடுத்து வருகின்றது. எனினும் சாமந்தி பயிரில் சிறிது பூச்சி தாக்குதலும் ஏற்பட்டுள்ளது. அதனை கட்டுப்படுத்த பல்வேறு மருந்துகளை தெளித்து வருகின்றோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>விழுப்புரம் மாவட்டத்தில் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி</u>

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். <u>பலத்த மழை</u>

விழுப்புரத்தில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது லேசான சாரல் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் அரபிக்கடலில் தென்கிழக்கு பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளதால் தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்திருந்தது. இந்தநிலையில் விழுப்புரத்தில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து மதியம் 1 மணியளவில் லேசான சாரல் அடித்தது. பின்னர் நேரம் ஆக ஆக வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து பலத்த மழை பெய்ய ஆரம்பித்தது. சுமார் 30 நிமிடங்கள் மழை பெய்தது. இதனால் விழுப்புரம் பாகர்ஷா வீதி, கே.கே.சாலை, நேருஜி சாலை ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடியதால் நடைபாதை வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பலத்த மழை காரணமாக வாகன ஓட்டிகள் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி வாகனங்களில் சென்றனர். விழுப்புரத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையின் காரணமாக ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>கள்ளக்குறிச்சி</u>

கள்ளக்குறிச்சி பகுதிகளில் கடந்த 5 நாட்களாக கடும் வெயில் பொதுமக்களை சுட்டெரித்து வந்தது. நேற்று மதியம் 1 மணியளவில் திடீரென வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தில் 1.30 மணிக்கு லேசான சாரலுடன் தொடங்கிய மழை 3.30 மணியளவில் பலத்த மழையாக கொட்டியது. மழை காரணமாக பஸ் நிலையம், நான்குமுனை சந்திப்பு, காந்தி சாலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கடைவீதி, துருகம் சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழைநீர் ஆறாக ஓடியது. இதேபோல் சின்னசேலம், கச்சிராயப்பாளையம், கல்வராயன்மலை, தியாகதுருகம் போன்ற பகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்தது.

<u>திண்டிவனம்</u>

திண்டிவனத்தில் காலையில் இருந்தே வெயில் சுட்டெரித்தது. மதியம் 2.30

மணியளவில் வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து காணப்பட்டது. 3 மணியளவில் திடீரென இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழை இடைவிடாமல் சுமார் ½ மணி நேரம் பெய்தது. இந்த மழையினால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்க தொடங்கியது.

இதேபோல் ஒலக்கூர், எண்டியூர், தென்பசார், தென்களவாய், சாரம் உள்ளிட்ட பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.